


# கைபேசிதுறையில் தோல்வியைத் தழுவும் இளம் தொழிலாளர்கள்



கைபேசிதொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் நினைவிருக்கிறதா ?

தொழிலாளர் உரிமைகள் பற்றி அறிந்துகொள்ளுங்கல்

சமூகப் பாதுகாப்பு பற்றி அறிந்து கொள்ளுங்கள்

நிறுவனத்தின் கொள்கைகளை அறிந்து கொள்ளுங்கள்

தொழிலாளர் கவுன்சில்களில் பங்குபெறுங்கள்

உங்கள் உடல்நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

உங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தயாராக இருங்கள்



கைபேசி : அதிகம் விரும்பப்படும் கருவியை உற்பத்தி செய்பவர் நீங்கள்.

அழைப்பைத் தவறவிட்டுவிடாதீர்கள்.

சக தொழிலாளர்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் உரிமைகளை கேளுங்கள்.

Cividep-India தொழிலாளர் உரிமைகளில் அக்கறைகொண்ட பெங்களூரைச் சேர்ந்த NGO தொடர்பு info@cividep.org

பெண் தொழிலாளர்கள் சங்கம் (PTS) இது பெண்களின் தொழிற் சங்கம் 8/2 தர்மராஜா கோயில் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. Tel : 044-26478386.

உங்கள் எதிர்காலம் குறித்த உற்சாகத்தில் திளைத்திருந்தீர்கள். அழகான பணியிடம் உங்களுக்குப் பிடித்திருந்தது. வளரும் நவீன தொழிலில் சேர்ந்தது பெருமையாகவும் இருந்தது.

உங்களில் பலர் பணியில் சேர்ந்தது இப்போது ஒரு வருடம் அல்லது சில வருடங்கள் பூர்த்தியாகியிருக்கிறது. ஒளிமயமான எதிர்காலம் பற்றிய உங்கள் கனவுகள் நிறைவேறிவிட்டனவா? அல்லது, உங்களுடைய பணிச் சூழல், ஊதியம், பணி உயர்வு, தொழில் பயிற்சி, சமூகப் பாதுகாப்பு நலன்கள் இவற்றில் ஏமாற்றம் அடைந்திருக்கிறீர்களா?

ஸ்ரீபெரும்புதூரில் பல தொழிலாளர்களை கண்டு பேட்டி எடுத்து நாங்கள் செய்த ஆய்வில் பெருமாலானவர்கள் தங்கள் வேலையைத் திருப்திகரமாக உணரவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததற்கும் கிடைத்திருப்பதற்கும் பெருத்த இடைவெளியே நிலவுகிறது.

# இளம் தொழிலாளர்கள் பேசுகிறார்கள்

## கர்ப்பிணிகளுக்கு தண்டனை

"கர்ப்பிணிப் பெண்கள் வேலைசெய்வது கடினமாக இருக்கிறது. உற்பத்தி இலக்கு அதிகம், வேலையும் சிரமம். ஷிப்ட் முறையில் வேலை செய்வது கர்ப்பிணிப் பெண்களின் உடல் நலத்தை மற்றவர்களைவிட அதிகம் பாதிப்பிற்கு உள்ளாக்குகிறது. பெரும்பாலான பெண்கள் குழந்தைபிறந்ததும் வேலையை விட்டுவிடுகிறார்கள். 80 சதவீதம் பெண் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு அவர்களுடைய தேவைகளை அசட்டை செய்வது இந்நிறுவனங்களின் வஞ்சகத்தையே காட்டுகிறது.

சுமதி (வேறு பெயர்)
தொழிலாளி (IMEI)

ராமன் (வேறு பெயர்), 25 வயது
ஷிஃப்டிங் துறை

"எங்கள் முன்னோர்கள் உழுத நிலங்களில் இந்த நிறுனங்கள் வியாபாரம் செய்கின்றன. ஆனால் SEZ அருகில் உள்ள கிராமங்களில் இருந்து வரும் இளைஞர்களுக்கு இந்நிறுவனங்கள் வேலை கொடுக்க மறுக்கின்றன. வேலைக்கு எடுத்துக்கொண்ட ஒரு சில இளைஞர்களும் இழிவாக நடத்தப்படுகிறார்கள். இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்கள் தமது பலவீனங்கள் காரணமாக பணிவாக நடந்துகொள்வார்கள் என்பதால் அவர்களைத்தான் இந்நிறுவனங்கள் விரும்புகின்றன.

## உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை இல்லை.

## பயன்படுத்தி தூக்கியெறிந்து விடுகிறார்கள்

பணி நிரந்திரம் செய்யப்படாத நிலை எங்களை வாட்டுகிறது. என்னைவிட திறைம மிகுந்த பலர் பணி நீக்ணீம் செய்யப்பட்டதைப் பார்த்திருக்கிறேன். நான் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. என்னை எப்போது பணி நீக்கம் செய்வார்கள் என்பதுகூடத் தெரியாது.

லக்ஷ்மி (வேறு பெயர்) 23 வயது
அஸெம்ப்ளி துறை

## ஊதியத்திலும் ஏமாற்று

கைபேசி நிறுவனங்களுக்கு ஆள் எடுக்க தனியார் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த "பணி கண்காட்சி" நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன் ஊதியத்திலும் போனசிலும் வருடாந்திர உயர்வு இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே என் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத சம்பளம் - ரூ.4000 தான் தருகிறார்கள். எங்களுக்கு எதிர்காலமே இல்லை ஏமாற்றப்பட்டதாக உணர்கிறோம்.

செல்வம் (வேறு பெயர்) 24 வயது
ஆபரேட்டர்

ஜெயா (வேறு பெயர்) , 22 வயது
ஆபரேட்டர்

உற்பத்திப் பிரிவில் வேலைசெய்யும் பலருக்கு அரிப்பு, வெடிப்பு, கொப்புளம் போன்ற தோல்வியாதிகள் வருகிறது. சிலருக்கு அடிமுதுவில் வலி, கண் எரிச்சல், மூட்டு வலி இருக்கிறது. தொழிற்சாலையில் சில மருத்துவ வசதிகள் இருந்தாலும் நாங்கள் கையாளும் நச்சுப் பொருள்கள் நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன ஆனால் இங்கு அறிவியல்பூர்வமான கண்காணிப்பு முறை இல்லை.

## எங்கள் உடல்நலன் குறித்த அக்கறை இல்லை



## தொழிலாளர்கள் ஏன் அதிருப்தியுற்றிருக்கிறார்கள் ?

- ஊதிய உயர்வு போனஸ் வழங்கப்படுவதில்லை.
- புதிய பயிற்சிகள் தரப்படாததால் பணி உயர்வுக்கு வழியில்லை. சேர்ந்தபோது
- எந்தப் பணியில் இருந்தார்களோ அதிலேய தேங்கி விட்டுருக்கிறார்கள்.
- நச்சுப் பொருள்களோடு சேவைசெய்தால் உடல் நலன் குறித்த கவனமான
- ஆவணப்படுத்தலும் கண்காணிப்பும் அவசியம். ஆனால், நிறுவனங்கள் அக்கறை கொள்வதில்லை.
- நீண்ட தூரங்களில் இருந்து வந்து பணியில் சேர்ந்திருப்பவர்களுக்கு வாடகை கட்டவோ சத்துள்ள உணவைக் கொள்ளவோ, பெற்றோர்களைக் காப்பாற்றவோ எதிர்காலத்திற்காக சிறிது சேமித்து வைக்கவோ கூட போதுமான ஊதியம் கிடைப்பதில்லை.
- பொழுதுப் போக்கவும் புத்துணர்ச்சி பெறவும் நேரம் கிடைப்பதில்லை.
- பெரும்பாலான தொழிற்சாலைகள் தொழிலாளர் சங்கங்களை அனுமதிப்பதில்லை. இதனால் தொழிலாளர்கள் தமது நலன்களைப் பற்றி நிர்வாகத்தோடு எப்படி பேசமுடியும் ?

## பிரம்மிக்க வைக்கும் நிறுவனங்கள், தொழிலாளர் நலனில் அக்கறையற்ற கொள்கைகள்

கைபேசிதயாரிப்பு நிறுவனங்கள் பேரளவிலான நிதி ஆதாரம் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள். இவற்றின் சந்தை மற்றும் தொழில்நுட்பத் திறன்களும் வியக்கவைப்பவை. ஆனால், தொழிலாளர் நலனில் அவற்றின் அணுகுமுறை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

இந்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றியும் மேலும் சற்று விளக்கமாகப் புரிந்துகொள்வோம்.

2011 ஆம் ஆண்டளவில் இந்தியா 15 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (அது 7,50,00,00,000 ரூபாய்) மதிப்புள்ள 95 மில்லியன் கைபேசிகளைத் தயாரிக்கும் என்று தெரியுமா ?

ஐந்து முன்னணி பன்னாட்டு நிறுவனங்களான
நோக்கியா,
சாம்சங்,
மோட்டோரோலா
சோனி எரிக்ஸன்
எல் ஜி
ஆகிய இந்தியாவில் கைபேசி தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. மூலக் கருவி தயாரிப்பாளர்கள் என்று இவை அழைக்கப்படுகின்றன.

ஃப்லெக்ட்ரானிக்ஸ், எல்கோடெக், ஜனில் போன்ற மின்னணு உற்பத்திச் சேவை நிறுவனங்களின் துணையோடு இந்நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேலும், அஸ்போகாம்ப், பெர்லோஸ், சால்காம்ப் போன்ற உபரிக் கருவிகள் சப்ளை நிறுவனங்களும் இந்த உற்பத்திச் சங்கிலியில் இணைந்திருக்கின்றன.

மத்திய மாநில அரசுகள் இந்நிறுவனங்களுக்கு பல சலுகைகள் அளித்து வருகின்றன. நோக்கியா மற்றும் பிற நிறுவனங்களுக்கு தமிழக அரசு விற்பனை வரி, உபரிக்கட்டணம், மறுவிற்பனை வரி இன்னும் பல வரிகளில் இருந்து விலக்கு அளித்திருக்கிறது.

பல ஆயிரம் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள் அவர்களது நிலங்களில் இருந்தும் இருப்பிடங்களில் இருந்தும் போன்றவர்களை வெளியேற்றி இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்களை அரசாங்கமே கையகப்படுத்திக் கொடுத்தது.

இந்நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் அளிப்பதன் மூலம் பள்ளிகள், மருத்துவமனைகள், சாலைகள் இன்னும் பொதுச் சேவைகள் வழங்குவதற்கு பயன்படக்கூடிய வருமானத்தை அரசாங்கம் கைகழுவி விடுகிறது.

மக்களிடமிருந்து அரசாங்கத்திடமிருந்து எடுத்துக் கொண்டதில் சிறு சதவீதத்தையாவது இந்நிறுவனங்கள் திரும்பத் தருகின்றவா ? மதிப்பான வேலைகளைத் தருகின்றனவா ?

இளம் தொழிலாளர்களுக்கு வாழத்தகுதியான ஊதியம், நச்சுப் பொருள்களால்உடல் நலனுக்கு கேடு விளையாமல் இருக்க பாதுகாப்பு, அவர்களுடையபணித்திறனை அதிகரித்து, பணியில் முன்னேற்றம் காண வைப்பது ஆகியவற்றில் இந்நிறுவனங்கள் அக்கறை காட்டுகின்றனவா ?

நச்சுப் பொருள்களால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு கவனத்தில் கொள்கின்றனவா ?

இத்தொழிற்சாலைகளால் நிலங்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கைநல்ல நிலையில் இருக்கிறதா ?

நிறுவனங்களில் பெரும் நிறுவன சமூகக் கடமைகள் என்று அழைக்கப்படும்கொள்கைத் திட்டங்கள் இருக்கின்றன. அவற்றில், உள்ளூர் மற்றும் பன்னாட்டு சட்டங்களுக்கும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தரக்கட்டுப்பாடுகளுக்கும் இணங்கி நடக்க அவை உறுதி ஏற்கின்றன. ஆனால், நடைமுறையில் இத்திட்டங்களைஇவை எந்த அளவிற்குத் தீவிரமான அக்கறையோடு செயல்படுத்துகின்றன ?

# தொழிலாளர்கள் செய்ய வேண்டியது என்ன ?

**தொழிலாளர் உரிமைகள் பற்றி அறிந்துகொள்ளுங்கல் :** பொறுப்பான தொழிற்சங்கங்கள், NGOs தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் ஊதியம் சமூகப் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் பணியிடப் பாதுகாப்பு போன்ற உரிமைகளை விளக்குவார்கள். குறைந்தபட்ச ஊதியச் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், போனஸ் சட்டம் விடுமுறை சட்டம் பணிப்பயிற்சியில் இருப்போருக்கான சட்டம், தொழில் தகராறு சட்டம், தொழிலாளர் இழப்பீட்டு சட்டம் போன்ற சட்டங்கள் உங்கள் தொழிற்சாலைக்கும் பொருந்தும். பணி தொடர்பான சட்டங்களை உங்களுக்குத் தெரியப்படுத்தும் கடமையும் நிறுவனத்திற்கு இருக்கிறது.

**சமூகப் பாதுகாப்பு பற்றி அறிந்து கொள்ளுங்கள் :** வைப்பு தொகை பணியாளர் இன்சூரன்ஸ் இரண்டும் உங்கள் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் தூண்கள். இத்துறையின் வலைத்தளங்களிலும் அதிகாரிகள் மூலமும் இவைகுறித்த தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**நிறுவனத்தின் கொள்கைகளை அறிந்து கொள்ளுங்கள் :** உங்களுடைய மேலாளர்களிடம் பேசி தொழிலாளர் நலன் தொடர்பான உங்கள் நிறுவனத்தின் கொள்கைத் திட்டத்தின் நகலை கேளுங்கள். அவற்றை உங்கள் தொழிற்சாலையில் பின்பற்றப்படுகின்றனவா என்று சரிபாருங்கள்.

**தொழிலாளர் கவுன்சில்களில் பங்குபெறுங்கள் :** நிர்வாகம் கலந்து பேசும் பணியிடக் கமிட்டிகள் இருந்தால், அவற்றில் உற்சாகமாகப் பங்கு கொண்டு பிரச்சினை எதுவென்றாலும் எழுப்புங்கள்.

**உங்கள் உடல்நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்:** கையுறைகள் முகக் கவசங்கள் போன்ற உபகரணங்கள் அணிவது சம்பந்தமான விதிமுறைகளைப் பின்பற்றுவதில் தொழிற்சாலை அதிகாரிகளோடு ஒத்துழையுங்கள். விதிமுறை வழிகாட்டுதல் பிரசுரத்தைப்படியுங்கள் அவைதரப்படாமல் இருந்தால் கேட்டு வாங்குங்கள். உடல் நலப் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

**உங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தயாராக இருங்கள்:** 8 மணி நேர வேலை மற்றும் உரிமைகள் எவையும் பிச்சையாக கொடுக்கப்பட்டதில்லை. பல நூற்றாண்டுகள் போராடிப் பெற்ற உரிமைகள் அவை. தொழிலாளர் இயக்கம் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள்; அதில் பங்கு பெறுவதற்கு பெருமை கொள்ளுங்கள். இந்த உலகம் உங்களைப் போன்ற தொழிலாளர்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் கட்டி யெழுப்பப்பட்டது.